கோவை சரக காவல்துறை துணைத் தலைவர் விஜயகுமார் இ.கா.ப. மறைவு!

# தமிழ்நாடு காவல் துறைக்குப் பேரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஜூலை 9 -**

**கோவை சரக காவல்துறை துணைத் தலைவர் விஜயகுமார் திடீர் மரணமெய்தினார். அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "விஜயகுமார் இ.கா.ப., அவர்களின் மரணம், தமிழ்நாடு காவல்துறைக்குப் பேரிழப்பு!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

கோவை சரக காவல்துறை துணைத் தலைவர் திரு.விஜயகுமார், அவர்கள் இன்று அகால மரணம் அடைந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்தேன்.

விஜயகுமார் அவர்கள் தனது பணிக் காலத்தில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட பல்வேறு பணிப் பொறுப்புகளில் சிறப்பாகப் பணியாற்றி தமிழ்நாடு காவல்துறைக்குப் பெருமை சேர்த்தவர்.



அவருடைய இந்த மரணம் தமிழ்நாடு காவல் துறைக்குப் பேரிழப்பாகும்.

அவருடைய குடும்பத்தாருக்கும் காவல்துறையைச் சேர்ந்த நண்பர்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (07.07.2023) இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் திருச்சிராப்பள்ளி சமயபுரம் மாரியம்மன் திருக்கோவில் திருமண மண்டபத்தில் 10 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைத்து, சீர்வரிசை பொருட்களை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்வில் மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் கதிரவன், தியாகராஜன், ஸ்டாலின் குமார், இந்து சமய அறிநிலையத்துறை இணை ஆணையர் திருமதி.கல்யாணி, உதவி ஆணையர்கள் ரவிச்சந்திரன், ம. லெட்சுமணன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் த.இராஜேந்திரன், வைரமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

க. செல்வராஜ் எம்.எல்.ஏ. தலைமை!

# திருப்பூர் வடக்கில் கலைஞர் நூற்றாண்டு விழா - பட்டிமன்றம்!

## கோவி. செழியன் -நெல்லிக்குப்பம் புகழேந்தி - கரூர் முரளி - சைதை சாதிக் - தூத்துக்குடி சரத்பாலா சிறப்புரை!

திருப்பூர், ஜூலை 9-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவை உலகமெங்கும் சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, திருப்பூர் வடக்கு மாவட்டம், வடக்கு மாநகர கழகத்தின் சார்பில் சிறப்பு பட்டிமன்றம் திருப்பூர் கொங்கு மெயின் ரோடு, எம்.எஸ். நகரில் நேற்று (08.07.2023, சனிக்கிழமை) மாலை 06.00 மணியளவிலும், திருப்பூர் தெற்கு மாநகர கழகத்தின் சார்பில் சுழலும் சொல்லரங்கம் பல்லடம் ரோடு, ராமசாமி முத்தம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. 09.07.2023 ஞாயிற்றுக்கிழமை இன்று காலை 09.00 மணியளவில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் ஆகிய எனது தலைமையில், வடக்கு மாநகர செயலாளர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், தெற்கு மாநகர செயலாளர் டி.கே. டி.மு.நாகராசன் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு கொறடா கோவி.செழியன் நடுவராகவும், கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, தலைமைக் கழக பேச்சாளர்கள் சைதை சாதிக், தூத்துக்குடி சரத்பாலா ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகவும் பங்கேற்கின்றனர்.

அது சமயம் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர், வட்ட கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், தொ.மு.ச நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமாய் மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.



தருமபுரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள எம்.ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன்,துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர் கோ.அசோக், ஆர்.பி.முத்தமிழன், கே.ஆர்.சி.செல்வராஜ், பெ.ராஜகோபால், என்.எஸ்.கலைச்செல்வன், த.கார்த்திக் ஆகியோர் கழக அலுவலகத்தில் தருமபுரி கிழக்கு மாவட்ட செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணியை நேரில் சந்தித்து சால்வை அணிவித்து மரியாதை செலுத்தி வாழ்த்து பெற்றனர்.உடன் மாவட்ட பொருளாளர் வே.தங்கமணி மற்றும் கழகத்தினர் இருந்தனர்.

மத்திய பிரதேசத்தில் பா.ஜ.க. கொடூரன் பழங்குடி இளைஞன் மீது சிறுநீர் கழித்த நிகழ்ச்சி -

# சங்பரிவார் வளர்த்து வரும் வெறுப்பு அரசியலின் விளைவு!

## 'தீக்கதிர்' நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜூலை 9-

மத்திய பிரதேசத்தில் பழங்குடி இனத்தைச் சேர்ந்த இளைஞரின் மீது பா.ஜ.க.வைச் சேர்ந்த கொடூரன் சிறுநீர் கழித்த நிகழ்ச்சியின் அதிர்ச்சி அலைகள், சங்பரிவார் வளர்த்து வரும் பழங்குடியினத்தினர் மீதான வெறுப்பு அரசியலின் விளைவு என 'தீக்கதிர்' நாளேடு 7.7.2023 அன்று தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

மத்தியப் பிரதேச மாநிலத்தில் பழங்குடி இனத்தைச் சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞரான தஷ்மத் ராவத் முகத்தில் பா.ஜ.க.வைச் சேர்ந்த பிரவேஷ் சுக்லா எனும் கொடூரன் சிறுநீர் கழித்த காணொலிக் காட்சி நாடு முழுவதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பா.ஜ.க. எம்.எல்.ஏ.வான கேதார்நாத் சுக்லாவின் பிரதிநிதியான பிரவேஷ் சுக்லா குடி போதையில் இந்த கொடூரச் செயலை செய்துள்ளான். இதற்கு நாடு முழுவதும் கடும் கண்டனம் எழுந்தது. இந்த மனிதத் தன்மையற்ற நிகழ்வு கடந்த சில நாட்களுக்கு முன்பு நடந்திருக்கிறது. பாதிக்கப்பட்ட பழங்குடியினத்தைச் சேர்ந்த குடும்பத்தினரைச் சந்தித்து இதை வெளியே சொல்லக்கூடாது என பா.ஜ.க.வினர் மிரட்டியுள்ளனர். காணொலிக் காட்சி வெளிவந்தவுடன் பிரவேஷ் சுக்லா தன்னுடைய ஆதரவாளர் அல்ல என்று பா.ஜ.க. எம்.எல்.ஏ. மறுத்திருக்கிறார். ஆனால் அவரோடும், மாநில பா.ஜ.க. தலைவர்கள் பலரோடும் பிர வேஷ் சுக்லா எடுத்துக் கொண்ட புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.


தீக்கதிர்
2023 ஜூலை 07 வெள்ளிக்கிழமை
சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்...

வேறு வழியில்லாத நிலையில் பிரவேஷ் சுக்லாவை போலீசார் கைது செய்துள்ளனர். சட்ட விரோதமாக கட்டப்பட்டது என்று கூறி அவரது வீட்டையும் இடித்துள்ளனர். சட்ட விரோதமாக பா.ஜ.க.வைச் சேர்ந்த பிரவேஷ் வீடு கட்ட அனுமதித்தது எப்படி என்ற கேள்வி ஒருபுறமிருக்க, மக்களின் கோபத்தை திசை திருப்பவே பா.ஜ.க. அரசு இத்தகைய நாடகத்தை நடத்து கிறது.

ம.பி.முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் பழங்குடி இனத்தைச் சேர்ந்த அந்த இளைஞரை அழைத்து பாதபூஜை செய்து மன்னிப்புக் கேட்ப தாகக் கூறியிருக்கி றார். மன விகாரம் பிடித்த ஒரு மனிதனின் அநாகரிகச் செயலாக மட்டும் இதை தனித்துப் பார்க்க முடியாது. சங் பரிவாரம் வளர்த்து வரும் சிறுபான்மை, தலித், பழங்குடி மக்களுக்கெதிரான வெறுப்பு அரசியலின் விளைவே ஆகும் இது. இத்தகைய மிருகங்களைத்தான் பா.ஜ.க. வளர்த்து விடு கிறது. சென்னையில் பா.ஜ.க.வின் மாணவர் அமைப்பான ஏ.பி.வி.பி.யின் முன்னாள் நிர்வாகி டாக்டர் சுப்பையா என்பவர் பக்கத்து வீட்டு மூதாட்டி வீடு முன்பு சிறுநீர் கழித்த விவகாரம் நினைவுகொள்ளத்தக்கது. இவர் கைது செய்யப்பட்ட போதும் பின்னர் பா.ஜ.க. வில் உயர் பொறுப்புக்கு உயர்த்தப்பட்டார்.

கடந்த 20 ஆண்டுகளாக பா.ஜ.க. ஆட்சி நடத்தி வரும் மத்தியப் பிரதேச மாநிலத்தில் 2021 ஆம் ஆண்டில் தலித்துகளுக்கு எதிராக 7,214 குற்றங்களும், பழங்குடியினருக்கு எதிராக 2,627 குற்றங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆர்.எஸ்.எஸ். பரிவாரம் நாட்டில் வெறுப்பு அரசியலை வளர்த்து விட்டு வருகிறது. மனிதத்தன்மையற்ற மனிதர்களையே அவர்கள் உருவாக்குகிறார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம். அங்கு நடந்திருப்பது தனி மனித விவகாரம் அல்ல. ஆபத்தின் அறிகுறி.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத்துறை முறைகேடு புகார்!

# எடப்பாடி மீது புதிதாக விசாரணை!

## சென்னை-உயர்நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்புத் துறை தகவல்

சென்னை, ஜூலை 9-

முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிரான நெடுஞ்சாலை துறை முறைகேடு புகார் தொடர்பாக, புதிதாக விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்புத் துறை தெரிவித்துள்ளது.

முந்தைய அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் நெடுஞ்சாலைத் துறையில் டெண்டர் கோரியதில் 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடு நடந்துள்ளதாக கூறி, முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிராக அளித்த புகார் மீது, சிறப்பு புலனாய்வு குழுவை அமைத்து விசாரிக்க உத்தரவிடக் கோரி தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ் பாரதி, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், நெடுஞ்சாலை துறை டெண்டர் முறைகேடு புகார் குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்தும்படி, 2018ம் ஆண்டு உத்தரவிட்டிருந்தது. இதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், உயர் நீதிமன்ற உத்தரவை ரத்து செய்ததுடன், வழக்கை சென்னை உயர்நீதிமன்றத்துக்கு மாற்றியிருந்தது.

தஞ்சை மாத்தூர் கழக முன்னோடி

# திருமதி எஸ்.சீதாலட்சுமி மறைவு!

## கழக முன்னணியினர் அஞ்சலி!

தஞ்சை, ஜூலை 9-

தஞ்சை மாவட்டம், மாத்தூர் கிராமத்தில் வசித்து வந்த திராவிட முன்னேற்றக் கழக மூத்த உறுப்பினர் திருமதி. எஸ்.சீதாலெஷ்மி (வயது 96) அவர்கள் முதுமையின் காரணமாக நேற்று முன்தினம் (07.07.2023) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



திராவிட முன்னேற்ற கழகம் தொடங்கியது முதல் உறுப்பினராக இருந்துள்ளார். 70 ஆண்டுகளுக்கும் மேலாக திராவிட முன்னேற்றக் கழகத்தில் முழு ஈடுபாட்டுடன் தஞ்சை பகுதியில் கழகத்திற்காக செயலாற்றினார். ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் மகளிர் அணியின் அவைத் தலைவராக செயலாற்றியுள்ளார்.

தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு, சிறை சென்றுள்ளார். கழகத்தில் மூத்த உறுப்பினர்களைக் கௌரவிக்கும் விதமாக, 2020-ஆம் ஆண்டு கழக இளைஞரணிச் செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தஞ்சையில் நடைபெற்ற நிகழ்வில் தயாளு அம்மையார் சுயமரியாதை பெண்கள் விருதினையும், பொற்கிழியினையும் வழங்கி பாராட்டப் பெற்றவர்.

அன்னாரின் மறைவினையொட்டி, கழக நிர்வாகிகளும், பொதுமக்களும் அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். மறைந்த சீதாலெட்சுமி அவர்களின் உடல் அடக்கம் நேற்று (08.07.2023) மாலை நடைபெற்றது. மறைந்த சீதாலெட்சுமி அவர்களுக்கு 5 மகன்களும், 1 மகளும் உள்ளனர்.



மாநில இளைஞரணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணி புதிய நிர்வாகிகளை மாவட்டம் வாரியாக அறிவித்தார்.இதனை தொடர்ந்து சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீரபாண்டி ஆ.பிரபு மற்றும் துணை அமைப்பாளர்கள் சிவராமன், சதீஷ்குமார், நடராஜன், பிரகாஷ், ராஜேஷ்குமார், ரமேஷ், மனோஜ்குமார் ஆகியோர் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கத்திடம் பொன்னாடை போர்த்தி வாழ்த்து பெற்றனர். அருகில் கெங்கவல்லி பேரூர் செயலாளர் பாலமுருகன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் தனசேகரன், மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் உடனிருந்தனர்.


# 16-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

ஜூலை 08 2023



சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

## இராம.சிவராமன் B.A., அவர்கள்

உனை விதைத்து வருடங்கள்
பதினாறு !
விருட்சமாய் எம்மில் நீங்கா நினைவோடு !
திராவிட அடலேறே ! என்றும்
தீராது தெக்கத்தி மண்ணில்
உன் வரலாறே !

நீங்கா நினைவுடன்...

குடும்பத்தார்கள் திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்.